ஆண்டறிக்கை
2011

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

லான்லிப் கட்டிடம், இல 46/56, நவம் மாவத்தை, கொழும்பு 02.

LANLIB Building, No.46/56' Nawam Mawatha, Colombo 02

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

திரு. தீபால் சூரியயாராச்சி

ஆணையாளர்

கலாநிதி எம். எ. விஜயரட்ன

உதவி ஆணையாளர்

கலாநிதி காமிக பிரதாபசிங்க

உதவி ஆணையாளர்

திருமதி. பி. எம். சுதர்சனி பீரிஸ்

திறைசேரி பிரதிநிதி

பணிப்பாளர் (சி. நி. அ.)

திருமதி. டி. அநுராதா எல். இளையப்பெருமா

பணிப்பாளர் (சி. நி. அ.) (பதில்)

ஆணையாளர் மீளாய்வு

இலங்கையர்களுக்கு சட்ட, நிதி, தொழில்நுட்ப உதவியை வழங்குவதன் ஊடாக இலங்கையின் ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் குறிக்கோளை கொண்ட 1979ஆம் ஆண்டின் 75ஆம் இலக்க சட்டத்தின் மூலமே இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு வரை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, வியாபார அமைச்சின் கீழே இயங்கியதுடன் அதன் பின்பு 2010ஆம் ஆண்டு வரை ஆணைக்குழுவானது வியாபார முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்படுத்துகை அமைச்சின் கீழ் இயங்கியது. 2010ஆம் ஆண்டு மே மாதம் ஆணைக்குழுவானது தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுடன் இணைக்கப்பட்டது.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆணையாளர் பதவியை 2011, ஆகஸ்ட் மாதம் 1ஆம் நாள் நான் பொறுப்பெடுத்தேன். ஆணைக்குழுவின் ஆணையாளர் பதவியை நான் பொறுப்பெடுத்த நேரம், ஆணைக்குழுவின் பிரதான பதவிகள் வெற்றிடமாக இருந்ததுடன் அப்பதவிக்குரிய கடமைகளாவன பதில் பணிப்பாளர், பதில் கணக்காளர், பதில் நிர்வாக அலுவலரினால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. அவை யாவும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினை சேர்ந்தவர்களாலேயே ஆகும். அலுவலகமானது மிகவும் ஜனசந்தடியான இடத்தில் குறைவான வசதிகளுடன் காணப்பட்டது.

ஆணைக்குழுவின் முயற்சிகளிலிருந்து பெறப்பட்ட உச்ச பெறுபேறானது புதிய உள்ளூர் காப்புரிமைகளும் அவை வர்த்தகமயப்படுத்தலும் ஆகும். உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து காப்புரிமைகளில் 10% மானவையே வெற்றிகரமான வர்த்தகமயப்படுத்தலை தருகின்றன. ஆதலினால் வர்த்தகமயப்படுத்தல் செய்யக்கூடிய புத்தாக்கங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அதற்கான திறமுறையினை அதிகரிக்க வேண்டும்.

பொருளியல் நிலைமைகள், விஞ்ஞான மட்டும் தொழில்நுட்ப கல்வி மட்டம் மற்றும் புதிய கருத்துக்களை நோக்கியதான மனப்பாங்கு என்பன புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களில் செல்வாக்கு செலுத்தும் மூன்று பிரதான காரணிகள்.

புத்தாக்க செயன்முறையானது மூன்று வகுதிகளாக பிரிக்கலாம்.

- **அவதானிப்பு** – புத்தாக்குனர் என்பவர்கள் உயர் அவதானிப்பு திறனை கொண்டவர்கள் எனலாம். அவர்கள் புத்திளம் கண்களுடன் ஒரு விடயத்தை நோக்குவார்கள், அங்குள்ள பிரச்சினை என்ன என்று சரியாக வரையறுப்பார்கள் அந்தப்பிரச்சனைக்குரிய அதாவது கேள்விக்கான பதிலை தரக்கூடியவாறு இருப்பார்கள். (பிரச்சனை அல்லது வாய்ப்பின் வரைவிலக்கணம்)
- **தொழில்நுட்ப தலையீடுகள்** - பிரச்சனை என்ன என்று வரையறை செய்த பின்னர், தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் உதவியுடன் அப்பிரச்சனைக்கு ஒரு தீர்வினை தேடும் அடுத்த கட்டத்திற்கு புத்தாக்கனர் நகருகின்றனர். இது மூலவகை மாதிரியினை விருத்தி செய்ய வழிவகுக்கின்றது.
- **மேம்படுத்துகை** - இந்தக்கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தீர்வினை காப்புரிமை செய்தல் எனும் விடயமும் அப்புத்தாக்கத்தை வர்த்தகமயப்படுத்தலும் இதில் உள்ளடங்கும்.

இவற்றினை கருத்தினில் கொண்டு, ஆணைக்குழுவின் கூட்டுறவுத்திட்டமானது, இந்த மூன்று கட்டங்களுக்கும் ஒருங்கிணைந்ததாய் ஆக்கப்பட்டது.

குறுகிய காலத்திற்குள் அதாவது ஆகஸ்ட் மாதத்திலிருந்து 05 மாத கால அவகாசத்திற்குள் ஆணைக்குழுவானது 2008, 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுக்குரிய ஜனாதிபதி விருது வைபவத்திற்கு தன்னை தயார்படுத்திக்கொள்ள இயலும் தன்மை உடையதாகிறது. அத்துடன் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்துடனும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்துடனும் கூட்டிணைந்து புத்தாக்குனர்களுக்கு முகாமைத்துவம் சார் செயல்முறை அறிவினை வழங்கவும், பள்ளிக்கூட புத்தாக்குனர் நிகழ்ச்சித்திட்டங்களை புதுப்பிக்கவும் அதனூடே புத்தாக்கனர்களுக்கு வலுவான ஆளுமை சட்டகத்தை கொண்டு வரவும் தனியார் துறையினரின் உதவியுடன் பதவியினருக்கு பயிற்சிகளை முன்னெடுக்கவும் நுழைவுக்கட்டணம் மட்டுமே அறவிட்டு ஒரு பயிற்சிப்பட்டறையினை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு நடத்தியது. விரிவான ஒரு

வலைக்கடப்பீட திறமுறையை செயற்பட செய்தலானது, ஒரு அறிவுக்களமாகவும் அத்துடன் வியாபாரத்துறைக்கு புத்தாக்குனர்களை அறிமுகப்படுத்தும் ஒரு முறையாகவும் அமையும். விசேட பதவியினர் பயிற்சியானது AVIVA தேசிய அபிவிருத்தி வங்கிக் காப்புறுதி PLCயின் அநுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டது.

தேவைப்படுகின்ற மனிதவலு மற்றும் நிதி வளங்கள் என்பன வழங்கப்பட்டதில் தற்பொழுது ஆணைக்குழுவானது அதனது பணிப்பாணையில் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை பூரண நிறைவேற்றம் செய்யக்கூடியதாகவும் அது போன்று உள்ளூர் காப்புரிமைக்குரிய விண்ணப்பங்களை அதிகரிக்க கூடியதாகவும் இருக்கிறது.

அத்துடன் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கௌரவ அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் அமைச்சின் பிரதி அமைச்சர் கௌரவ பய்சர் முஸ்தபா ஆகியோரால் எமக்கு வழங்கப்பட்ட வழிக்காட்டல்கள் அதைவிட மேலாக முற்றுமுழுதாக அரசியல் செல்வாக்கினை அறவே தலையிடச்செய்யாது முற்றுமுழுதான சுதந்திரமான பணிச்செய்யக்கூடிய சூழ்நிலையுடன் கூடிய இந்த வாய்ப்பினை வழங்கியமைக்கு எனது நன்றியறிதலை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அது மட்டுமன்றி தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் தஹரா விஜயதிலகவினால் எமக்கு வழங்கப்பட்ட தொழில்சார்பியல் வழிக்காட்டல் மற்றும் உறுதுணைக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் பதில் அதிகாரிகள் பதவியில் இருந்தும் ஆணைக்குழுவின் செயற்றிறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்களிப்பினை வழங்கிய எனது இரு ஆணையாளர்கள், திறைசேரி பிரதிநிதி மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் எனது நன்றியை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமக்குரித்தான பணிகளுக்கும் அப்பால் சென்று ஆணைக்குழுவின் மேம்படுத்தலிற்காக தமது உச்ச பங்களிப்பினை வழங்கிய, அமைச்சு மற்றும் ஆணைக்குழுவினை சார்ந்த மற்றைய சகலருக்கும் நன்றியை சொல்ல நான் இங்கு விரும்புகிறேன்.

தீபால் சூரியாராச்சி

ஆணையாளர்

உள்ளடக்கம்

	பக்கம்
1. அறிமுகவுரை	**7**
1.1 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினை பற்றி	7
1.2 நோக்கு	7
1.3 பணி	7
1.4 பிரதான திறமுறைகள்	7
1.5 அமைப்பாண்மை கட்டமைப்பு / மனித வளங்கள்	8
2. செயலாற்றுகை	**9**
2.1 ஜனாதிபதி விருதுகள்	10-18
2.2 தேசிய கருத்தரங்கு	18-20
2.3 முகாமைத்துவ உறுதுணை	20-21
2.4 நிதி உறுதுணை	21
2.5 வலைக்கடப்பீடம்	21-22
2.6 பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டம்	23-25
2.7 அளுமை சட்டகத்தை மேம்படுத்துதல்	25
3. நிதிக்கூற்றுகள்	**26**
3.1 ஐந்தொகை	27
3.2 வருமான செலவினக்கணக்கு	28-29
3.3 குறிப்புகள்	30-35
3.4 நிதிக்கட்டமைப்பு	36
3.5 கணக்கியல் கொள்கைகள்	37-39
4. கணக்காய்வு அறிக்கை	**40-52**
5. கணக்காய்வு அறிக்கைக்கு பதில்கள்	**53-57**

1. அறிமுகவுரை

1.1 எங்களைப்பற்றி

1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது ஒரு நியதிச்சட்ட அமைப்பாகும். தொழில்நுட்பவியல், நிதி மற்றும் சட்ட உதவிகளை வழங்குவதன் மூலம் தேசத்தின் புத்தாக்கத்தினை மேம்படுத்தலே இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோளாகும். ஆணைக்குழுவானது ஒரு ஆணையாளர் மற்றும் இரு உதவி ஆணையாளர்களை கொண்டுள்ளது. அமைச்சரினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைப்புகளுக்கு அமைவுற அமைச்சரவையின் அமைச்சர்களினால் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 03 வருடங்களுக்கு நியமனம் செய்யப்படுவர்.

1.2 நோக்கு

‘‘புதியன கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கத்தின் ஊடான சுபீட்சம்’’

1.3 பணி

- தேசத்திற்கு புத்தாக்க செயற்றிறனை கொண்டு வருவதில் தலை சிறந்த உந்துவிசையாளராக இருத்தல்.
- கருத்துகளை செயல்முறைசார் பிரயோகங்களில் மாற்றீடு செய்வதற்கு துணைமை செய்யும் செயன்முறையின் முன்னோடியாக இருத்தல்.

1.4 பிரதான திறமறைகள்

1. ஜனாதிபதி விருதுகளை உடமையாக்கிக்கொள்ளலும் அவற்றை தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிசைந்ததாய் செய்தலும்.

2. புத்தாக்க கலாசாரத்தை விஸ்தாக்கும் நோக்குடன் ‘‘சஹசக் நிமவும்’’ தேசிய கண்காட்சியினை நடாத்துதலும் புத்தாக்க மாதத்தினை அறிமுகப்படுத்தலும்.

3. பள்ளிக்கூட மட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு புத்துயிர்ப்பு ஊட்டலும் மற்றும்

4. புத்தாக்குனர்களுக்காக நிதியங்களை பெற்றுக்கொடுக்க விழைதலும் அவர்களை தனியார்துறைக்கு அறிமுகப்படுத்தலும்.

5. அறிவினை வழங்குதல் மற்றும் நிபுணத்துவத்தை அணுகச் செய்தல் என்பவற்றின் ஊடாக புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல்.

6. பிரதான இயலச்செய்வாராக வலைக்கடப்பீட திறமுறை.

7. எமது புத்தாக்குனர்களுக்கு சர்வதேச அங்கீகாரம்.

8. காலப்போக்கின் தேவையினை பூர்த்தி செய்யும் சட்டத்தை இற்றைப்படுத்தல்.

9. பதவியினரின் செயற்றிறன் விருத்தி.

10. வலுமிகு ஆளுமை சட்டகம்.

1.5 அமைப்பாண்மை கட்டமைப்பு / மனித வளங்கள்



மனித வளங்கள் (2012.10.31இல் உள்ளவாராக)

பதவி	அங்கீகரிக்கப்பட்ட தொழில்நிலைப்பிரிவில் உள்ள எண்ணிக்கை	உளதாயிருக்கும் எண்ணிக்கை	வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கை
பணிப்பாளர் (சி. நி. அ.)	01	01 (பதில்)	01
பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர்	01		
பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (நிதி)	01	01 (பதில்)	01
நிர்வாக அலுவலர்	01	01 (பதில்)	01
கணக்காளர் / நிதி அலுவலர்	01		01
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	03	01	02
ஆராய்ச்சி உதவியாளர்	05	03	02
முகாமைத்துவ உதவியாளர்	06	05	01
சுாரதி	03	02	01
காரியாலய உதவியாளர்	02	02	

செயலாற்றுகை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

46/56, லான்லிப் கட்டிடம்

நவம் மாவத்தை

கொழும்பு 02.

தொலைபேசி: 011 – 2424964

தொலை மடல்: 011 – 24373

2. செயலாற்றுகை

2.1 ஜனாதிபதி விருதுகள்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் கூட்டத்தின் 11வது பிரிவின் ஊ பந்தியில் தரப்பட்டுள்ள பணிப்பாணைக்குழுவுக்கு அமைவுற், இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிப்பதற்காக இலங்கையில் காப்புரிமை பெற்ற புத்தாக்கங்களுக்கு ஜனாதிபதி விருதினை வழங்குவதன் மூலம் இலங்கை புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை பலரும் அறியச் செய்தல் வேண்டும் என்பதாகும்.

2008ஆம் வருடத்தில் வெற்றி பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் 2011ஆம் ஆண்டு வரை அவர்களுக்கு விருதுகள் எதுவும் வழங்கப்படவில்லை. 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுக்குரிய வெற்றிப்பெறுநர்கள் 2011ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கை புத்தாக்குனர் சட்டத்தின் ஊக்குவிப்பு சட்டத்தில் குறிப்பிட்டது போன்று, அதி மேதக ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்ட நடுவர்கள் அடங்கிய குழாமினால் ஜனாதிபதி விருது வைபவ வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இது வரைக்காலமும் சிறந்த புத்தாக்கமானது, மூன்று நிபுணர்களை உள்ளடக்கிய நடுவர் குழாமினால் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒன்பது துறைகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட புத்தாக்கங்களுக்குள் தெரிவு செய்யப்பட்டது. தொழில்நுட்ப துறைகளாவன மிகவும் விரிவடைந்து இருப்பினாலும் புத்தாக்குனர்களை தெரிவு செய்யும் செயன்முறையானது மிகவும் நியாயமான தீர்ப்பாக அமைய வேண்டும் என்பதினாலும் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஒத்திசையும் வகையில் நடுவர் குழாம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விரிவடையச் செய்வதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தீர்மானித்தது. ஆதலினால் ஜனாதிபதி செயலகத்தின் தேவைப்பாடுகளுக்கும் ஏற்ப நிபுணத்துவ குழுவின் எண்ணிக்கையானது வேறுப்பட்ட துறைகளுடன் தொடர்புற்ற வகையில் பதினான்காக அதிகரிக்கப்பட்டது.கௌரவ அமைச்சரின் வழிகாட்டலிற்கிணங்க, வருடத்தில் சிறந்த புத்தாக்குனர் மற்றும் துறைரீதியாக சிறந்த புத்தாக்குனர் ஆகியோருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை அதிகரிக்கப்பட்டது. சிறந்த புத்தாக்குனருக்கான பரிசுத்தொகையானது ஒரு மில்லியன் ரூபாயாகவும் துறைரீதியான சிறந்த புத்தாக்குனருக்கான பரிசுத்தொகையானது நூராயிரமாகவும் அதிகரிக்கப்பட்டது.விருது வழங்கலானது வைபவரீதியாக அலரிமாளிகையில் அதிமேதக ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ், தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின்

கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் பங்களிப்புடன் இடம்பெற்றது. 2008, 2009, 2010ஆம் ஆண்டுக்குரிய

வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும் 2008 மற்றும் 2009ஆம் வருடத்துக்குரிய சிறந்த புத்தாக்க பரிசு வழங்கப்படவில்லை. இதற்கு காரணம் நடுவர் குழாமின் தீர்மானத்திற்கு இணங்க எதுவித புத்தாக்கமும் குறிப்பிட்ட தரத்தில் இல்லை என்பதாகும்.

2010ஆம் ஆண்டுக்குரிய சிறந்த புத்தாக்கமானது வைத்தியர். எஸ். ஜெ. பி. லெனாடோரா என்பவரால் வென்றெடுக்கப்பட்டது. அவரின் பத்தாக்கம் - **The pneumatic self retaining surgical retractor system** – **மருத்துவதுறை**

2010 ஆம் ஆண்டிற்குரிய சிறந்த புத்தாக்கத்திற்கு அதிமேதக ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு

துறையில் வெற்றிப்பெற்ற வெற்றியாளர் ஒருவருக்கு கௌரவ அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி விருது வழங்கும் நிகழ்வு

விருதினை வெற்றிக்கொள்ளும் புத்தாக்கம் The pneumatic self retaining surgical retractor system

துறைகளில் வெற்றிப்பெற்ற வெற்றியாளர்களின் பட்டியல் - வருடம் 2010

1. துறை — விவசாயம்

புத்தாக்கம் — Device for converting large tea leaves into required size

புத்தாக்குனர் — எந்திரி. ரஜ்ஜின் ராஜபக்ஷ, ஜினசேன (தனி) நிறுவகம்

2. துறை — போக்குவரத்து

புத்தாக்கம் — An automatically collapsible motor bicycle Stand

புத்தாக்குனர் — ஆர். எ. டி. மதுரங்க கருணாஜீவ

3. துறை — கைத்தொழிற்துறையும் தொழில்நுட்பமும்

புத்தாக்கம் — A technically improved rubber tapping knife

புத்தாக்குனர் — ருவன்புர கருணாசேன

4. துறை — மருத்துவம்

புத்தாக்கம் — The pneumatic self retaining surgical retractor system

புத்தாக்குனர் — வைத்தியர் எஸ். ஜெ. பி. லெனாடாரா

5. துறை — தேசிய பாதுகாப்பு

புத்தாக்கம் — An improved life saving jacket

புத்தாக்குனர் — ஜி. எ. நிரோஸ் கிரிஷாந்த

6. துறை — சூழல்

புத்தாக்கம் — The "Power Mat"

புத்தாக்குனர் — பேராசிரியர் அசோகா நுகவெல
டிலடஹாரா எதிரிசிங்க
மானெல் சாந்தி மஹாநாம

சிறப்பு விருது வெற்றியாளர்கள் - வருடம் 2010

1. துறை — விவசாயம்

புத்தாக்கம் — Food items made with water lily seeds

புத்தாக்குனர் — டி. எம். எ. சி. பி. தசாநாயக

2. துறை — விவசாயம்

புத்தாக்கம் — Automatic pepper harvester

புத்தாக்குனர் — கெ. ஜி. சமிலா சிந்தஹானா கருணாசிங்க

3. துறை — போக்குவரத்து

புத்தாக்கம் — Remote controlled electronic mechanical jack

புத்தாக்குனர் — வை. எ. லயனல் ரூபரட்ன

4. துறை பொதுநலன்புரி

புத்தாக்கம் Compact bio gas plant

புத்தாக்குனர் ஜெ. எச். சிரிமல் திசேரா

---

5. துறை சூழலியல்

புத்தாக்கம் Technology of eco designed spherical for latex Handling

புத்தாக்குனர் டி. எஸ். எஸ். கோமஸ்

---

6. துறை கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம்

புத்தாக்கம் Polymeric Garment Material

புத்தாக்குனர் வரை. எ. டி. ஜி. கிளவுஸ் (தனி) நிறுவகம்

---

7. துறை பொதுநலன்புரி

புத்தாக்கம் Device to improve air circulation inside mosquito nets

புத்தாக்குனர் கெ. நாலக சந்திரவன்ச

துறைகளில் வெற்றிப்பெற்ற வெற்றியாளர்கள் பட்டியல் - வருடம் 2009

---

1. துறை — கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம்

புத்தாக்கம் — The High Performance Unitary Ply Tea Transport Container

புத்தாக்குனர் — நொயல் எ. தோமஸ்

---

2. துறை — பௌதீகவியல்

புத்தாக்கம் — The Radius Meter

புத்தாக்குனர் — தினேஸ் சன்தருவனட கடகம்கல

சிறப்பு விருது வெற்றியாளர்கள் - வருடம் 2009

1. துறை — பொதுநலன்புரி

புத்தாக்கம் — Two byte character allocation table for Sinhala and Tamil Languages

புத்தாக்குனர் — எஸ். டி. இ. குணதிலக

---

2. துறை — சூழலியல்

புத்தாக்கம் — Anaerobic filter technology for the treatment of waste water with acidic condition

புத்தாக்குனர் — அதுல ஜயமானா

---

3. துறை — மக்கள் நலன்புரி சேவை

புத்தாக்கம் — Natural grarity water filter

புத்தாக்குனர் — எச். எம். நவரட்ன ஜயபிம

4. துறை — பொது நலன்புரி

புத்தாக்கம் — Trusted cheque protocol

புத்தாக்குனர் — கிறிஸ்டின் சேஷிகா ஆஞ்சனி பர்ணாந்து

துறைகளில் வெற்றிப்பெற்ற வெற்றியாளர்களின் பட்டியல் - வருடம் 2008

1. துறை — பொதுநலன்புரி

புத்தாக்கம் — A Refrigerator for Storing Vaccines

புத்தாக்குனர் — எஸ். எ. பிரின்ஸ் சந்திரசேன

2. துறை — கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம்

புத்தாக்கம் — A Machine to insert under wire in to Brassieres

புத்தாக்குனர் — குருசிங்கஹகே ஜானக பண்டார கருசிங்க



3. துறை — எந்திரவியல்

புத்தாக்கம் — The Cashew Shell Stove and the Dehydration Unit

புத்தாக்குனர் — பி. கெ. மஹிபால

சிறப்பு விருது வெற்றியாளர்கள் - வருடம் 2008

---

1. துறை — மருத்துவம்

புத்தாக்கம் — Single dose inhaler for use in bronchial asthma

புத்தாக்குனர் — வைத்தியர் அனில் குணதிலக

---

2. துறை — எந்திரவியல்

புத்தாக்கம் — Improver electrical coconut scropper

புத்தாக்குனர் — திரு. ஜயவீர

---

3. துறை — கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம்

புத்தாக்கம் — A device for cutting asymmetric shapes in gems

புத்தாக்குனர் — வரை. சந்திரா ஜெம்ஸ் (தனி) நிறுவகம்

---

4. துறை — பொது நலன்புரி

புத்தாக்கம் — Mobile cash transfer solution

புத்தாக்குனர் — ஹெரால்ட் விஜயதுங்க

பரிசாக வழங்கப்படும் பணத்தின் பெறுமதி

வருடத்தின் சிறந்த புத்தாக்குனருக்கு	-	ஒரு மில்லியன் ரூபாய்
துறையில் வெற்றிப்பெற்ற வெற்றியாளர்களுக்கு	-	ஒவ்வொருவருக்கும் ரூபாய் 100,000/=
சிறப்பு விருது வெற்றியாளர்களுக்கு	-	ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25,000/=

ஜனாதிபதி விருது வழங்கள் வைபவ வரலாற்றில் முதல் தடவையாக, விருது வைபவத்தின் போது நடுவர் குழாமினை சார்ந்த ஒவ்வொருவருக்கும் அவர்களை அங்கீகரிக்கும் முகமாக தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அமைச்சர் கௌரவ. பவித்ரா வன்னியாராச்சி அவர்கள் ஒரு ஞாபகார்த்தப்பரிசினை வழங்கினார்.

அதே போன்று இந்நிகழ்விற்கும் மற்றும் விருதினை வென்ற புத்தாக்குனருக்கம் இலவசமாக ஊடக பிரசாரம் கிடைக்கப்பெற்றது. புத்தாக்குனரினதும் அவருக்கு கிடைத்த விருதினதும் மதிப்பினை மேலும் மேம்படுத்தும் பொருட்டு மிகவும் முனைப்பாக தெரியக்கூடிய பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதுடன் சுயாதீன தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவையில் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஒளிப்பரப்பப்பட்டன.

வெற்றிப்பெற்றவர்களுக்குரிய பரிசுப்பணம் உள்ளடங்களாக 2008, 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுக்குரிய ஜனாதிபதி விருது வழங்கல் வைபவத்திற்குரிய மொத்த செலவினம் ரூபாய் 8.6 மில்லியன் ஆகும்.

2.2 தேசிய கருத்தரங்கு

முதன் முறையாக புத்தாக்குனர்களுக்காக தேசிய மட்டத்தில் இடம் பெற்ற கருத்தரங்கு இதுவேயாகும். இக்கருத்தரங்கில் கருப்பொருளாக கலந்துரையாடப்பட்டது, புத்தாக்குனர் ஒருவர் அவரது புத்தாக்கங்களை சந்தைப்படுத்துவதில் வெற்றியீட்ட வேண்டுமாயின்

அவருக்கு வேறுபட்ட துறைகளை பற்றிய அறிவு பெறப்படல் வேண்டும் என்பதும் புத்தாக்குனர்களால் முகம் கொடுக்கப்படும் சில பொதுப்பிரச்சினைகளும் ஆகும்.

முதலாவது கட்டமாவது வேறுபட்ட துறைகளிலிருந்து அறிவு பெறப்படல் வேண்டும் என்பது. இக்கட்டத்தின் கீழ், நாட்டில் சிறந்த அறிவுத் தேர்ச்சியுடைய தொழில் சார்பியலாளர்களை உள்ளடக்கிய குழுவினரால் புத்தாக்குனர்களுக்கு வேறுபட்ட துறைகளினை பற்றிய அறிவினை புகட்டும் வகையில் விரிவுரையாற்றினர்.

இவர்களால் தெரிவு செய்யப்பட்ட கருப்பொருள்களாவன, புத்தாக்குனர்களின் அதிபுலமைச் சொத்து உரிமையினை பாதுகாத்தல், வியாபார திட்டமிடல், சந்தைப்படுத்தல் மற்றும் வெற்றயீட்டிய வினைமுயலுனர்களின் சிறந்த செயன்முறையினை பகிர்ந்துக்கொள்ளல் என்பதாகும்.

இரண்டாவது கட்டம் புத்தாக்குனர்களால் முகம் கொடுக்கப்படும் பொதுவான பிரச்சனைகளை கலந்துரையாடல் ஆகும். இக்கலந்துரையாடலானது வங்கிகள், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் ஆகியவற்றினை சார்ந்த பிரதிநிதிகள் கொண்ட குழுவுடன் இடம் பெற்றது. இக்காலப்பகுதிக்குரிய சட்ட ஏற்புக்குரிய கோரிக்கைகளாவன கூட்டுறவுத்திட்டத்தில் விளிக்கப்பட்டுள்ளது என நாம் உணர்கிறோம்.

முதன் முறையாக இக்காலப்பகுதியில் கலந்துக் கொள்வதற்கு ஒரு கட்டணம் அறவிடப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு இலக்கு செய்யப்பட்ட அமைப்பாண்மைகளில் இருந்து அமைக்கப்பட்டவர்கள் உள்ளடங்களாக 176 பேர் பங்குபற்றினர். அவர்களில் 96 பேர் கட்டணத்தை செலுத்திய அதே வேளையில் 15 மாணவர்கள் குறைவான கட்டணத்தையே செலுத்தினர். சமுதாயத்தின் சகல வகுதிகளையும் சேர்ந்தோர் இக்கருத்தரங்கில் பங்கு பற்றினர்.

இக்கருத்தரங்கிற்கு இணைவாக, புத்தாக்குனர் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய ஒரு விரிவான தவவுத்தளமானது விருத்தி செய்யப்பட்டது. இத்தரவுத்தள இற்றைப்படுத்தல் தொடர்பில் புத்தாக்குனர்களிடமிருந்து பெறப்பட்ட துலங்கள் மிகவும் சாதகமானது இருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் செலவிடப்பட்ட பணம் ரூபாய் 504,933.70ஆக இருந்த அதே வேளையில் கட்டணங்களின் மூலம் பெறப்பட்ட பணம் ரூபாய் 83,250.00 ஆகும்.

தேசிய கருத்தரங்கில் கலந்துக்கொண்ட சில சிறப்பு மிகு அழைக்கப்பட்டவர்கள்.

விரிவுரையை மிக ஆர்வத்துடன் கேட்கும் புத்தாக்குனர்களில் ஒரு சாரார்.

2.3 முகாமைத்துவ உறுதுணை

புத்தாக்கங்களைவ வர்த்தகமயப்படுத்தும் செயன்முறையில் புத்தாக்குனர்களே சந்தைப்படுத்தும் செயன்முறையை செய்வதாயின் அவர்களுக்கு ஒன்றில் முகாமைத்துவ திறன் இருத்தல் வேண்டும் அல்லது அவர்கள் தமது கருத்திட்டத்துக்கு முதலீடு செய்யும்படி கோரி முதலீட்டாளர்களை அல்லது வங்கிகளை அணுக வேண்டும். இவ்விடயம் தொடர்பில் அவர்களுக்கு வியாபார முகாமைத்துவ திறன் மற்றும் செயற்றிறன் பற்றிய அறிவு இருத்தல் வேண்டும். எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், முகாமைத்துவ

பட்டப் பின்படிப்பு நிறுவகமும் களனி பல்கலைக்கழகமும் எம்.பி.எ. மாணவர்களின் பட்டப் பின்படிப்பு ஒரு தகுதி தேவைப்பாடு என்ற அடிப்படையில் எம்.பி.எ. மாணவர்களுடன் புத்தாக்குனர்களை இணைப்பதற்கு ஒத்துக்கொண்டது. இது புத்தாக்குனர்களின் பெறுமானத்தை அதிகரிப்பதாக அமைந்தது.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்துடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் ''சந்தைப்படுத்தலில் அறிமுகப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்'' எனும் தலைப்பின் கீழ் ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டமானது 100 புத்தாக்குனர்களுக்கு இலவசமாக உணவும் எழுதுகருவி சாதனங்களும் வழங்கப்பட்டு சிறந்த அறிவுடைய சந்தைப்படுத்தல் நிபுணர்கள் விரிவுரையாற்ற நிகழ்த்தப்பட்டது.

2.4 நிதி உறுதுணை

புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களைவ ர்த்தகமயப்படுத்தல் செய்தல் பொருட்டு அவர்களின் கருத்திட்டங்களை அனுசரணை செய்யவோ அல்லது அவர்களை பங்காளராக செய்துக் கொள்ளவோ புத்தாக்குனர்களை தனியார் துறையினருக்கு அறிமுகப்படுத்தும் ஒரு திட்டம் உள்ளது.

2.5 வலைக்கடப்பீடம்

புத்தாக்குனர்களுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் ஒரு விரிவான வலைக்கடப்பீடத்தை தாபிப்பதற்கு ஒரு விற்பனர் நியமனம் செய்யப்பட்டார். வலைக்கடப்பீடத்தின் சில பிரதான சிறப்பியல்புகள் வருமாறு.

"வாங்குனர் விற்பனர் விற்பனை நிலையம்" - இது வியாபார உலகிற்கு புத்தாக்குனர்களை வெளிகாட்டும் ஒரு முயற்சியாகும். இங்கு தொழில்நுட்பவியலாளர்களால் முன்வைக்கப்படும் பிரச்சனையானது புத்தாக்குனர்களால் தீர்த்து வைக்கப்படும். இலங்கை மக்களுக்கு அவர்களின் வியாபார முயற்சிகளில் முதலீடு செய்வதற்குரிய புத்தாக்கங்களை இணங்பாண்பதற்கு இதுவும் ஒரு இடம் ஆகும்.

- பள்ளிக்கூட புத்தாக்குனர் கழகத்திற்கு தனிப்பட்ட முறையில் வலைக்கடப்பீடத்தில் ஒரு இடம் ஒதுக்கப்படும். மாணவ புத்தாக்குனர்கள் தமது புதுக்கருத்துக்களை வெளியிடவும் புத்தாக்கங்களை காட்சிப்படுத்தவும் கூட்டிணையவும் வாய்ப்பாக அமையும்.
- புத்தாக்கங்களுடன் கூட்டிணைவதற்கு வலைக்கடப்பீடமானது பிரதான நுழைவு வாயிலாக அமையும் என்பதுடன் அவர்களுக்கு அண்மித்த தகவல்களும் வழங்கப்படும்.
- காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதிலும் மற்றும் காப்புரிமையின் FAQயினை பெற்றுக்கொள்வதிலும் இருக்கின்ற நடைமுறைகள் படிப்படியாக காட்டப்பட்டு வழிக்காட்டப்படும். இம்முறையான வாசிப்பதற்கு இலகுவான E/S/T மின்-புத்தகத்தில் காட்டப்பட்டுள்ளது.
- மூன்றாம் தரப்பினருடன் புத்தாக்குனர்கள் பேச்சுவார்த்தைக்கு நுழையும் போது, வெளிப்படுத்தல்கள் இல்லாத உடன்படிக்கையின் மாதிரி ஒன்று பாவிக்கப்பட்டது.
- வலைக்கடபீடத்தில் புத்தாக்குனரின் தரவுத்தளம் ஒன்று பேணப்படும். இதன்துணையுடன் அவர்களுடன் குறுஞ்செய்தி அடிப்படையிலும் உரையாடல் நடத்த முடியும். இதனுடன் Facebook மற்றும் Twitter போன்ற சமூக ஊடகமும் இணைக்கப்படும்.

வலைக்கடப்பீட பாவனையின் மூலம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் சகல நடவடிக்கைகளும் மிகவும் வெளிப்படையாக்கப்படுவதினால் இங்கு எதுவித ஒளிவுமறைவுகளும் இல்லை. சகல கொள்வனவுகளும் வலைக்கடப்பீடத்தில் காட்டப்படுகின்றன. அத்துடன் வலைக்கடப்பீடத்தை பேணுவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பதவியினர் பயிற்றுவிக்கப்படுவர்

2.6 பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டம்

நாட்டில் புத்தாக்க கலாசாரத்தை மேம்படுத்துவதில் பங்களிப்பு செய்யும் முக்கிய செயற்பாடுகளில் ஒன்று பள்ளிக்கூட மட்டத்தில் புத்தாக்கங்களை மேம்படுத்தல் ஆகும். இச்செயற்பாடானது கல்வி அமைச்சின் உரிய வழிக்காட்டல்களுடன் கடந்த காலங்களில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புத்தாக்குனர் கழகங்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதில் பங்களிப்பு செய்வதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவில் பௌதீக ரீதியாக மனித வளங்களில் பற்றாக்குறை இருந்ததினால் ஊடகமானது இவ்விடயத்திற்கு உதவி செய்யும் தள மேடையாக பயன்னடுத்தப்பட்டது.

பள்ளிக்கூடங்களில் ஆக்கப்பூர்வமான தன்மை மற்றும் புத்தாக்கம் என்பவற்றில் ஈடுபாடு உள்ள மாணவர்களுக்கு ஐந்து கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது. ரம்பேவ மத்திய மஹா வித்தியாலயம், வெளிசிங்கே ஹரிஸ்சந்திரா மத்திய மஹா வித்தியாலயம், தம்புத்தேகம மத்திய மஹா வித்தியாலயம், பஸ்டியன் சில்வா மஹா வித்தியாலயம் மற்றும் வடமத்திய மாகாணத்தை சேர்ந்த மிஹிந்தலே மஹா வித்தியாலயம். அநுராதபுர மாவட்டத்தை சேர்ந்த 50 இற்கும் அதிகமான பள்ளிக்கூடங்களை சார்ந்த மாணவர்கள் இந்த கருத்தரங்கில் பங்கு கொண்டனர்.

நுகேகொடையிலுள்ள சாந்த ஜோசப் கல்லூரியிலும் மற்றும் மேல்மாகாணத்தில் உள்ள ஸ்ரீ சுமங்கல மஹா வித்தியாலயத்திலும் இரு மாணவ கருத்தரங்குகள் நடைபெற்றன.

இங்கு எடுத்துக் கொண்ட பொருளாவது ‘‘எவ்வாறு புத்தாக்குனர் கழகம் ஒன்றினை பள்ளிக்கூடத்தில் அமைப்பது மற்றும் எவ்வாறு அதனை உயிரோட்டம் உடையதாக பேணுவது?’’ , ‘‘புத்தாக்கங்களை படைத்தல் தொடர்பில் மாணவர்களை எவ்வாறு ஊக்குவிப்பது மற்றும் பள்ளிக்கூட இல்லங்களுக்கிடையே புத்தாக்க போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது?’’ மற்றும் ‘‘அதிபுலமைச் சொத்து உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது?’’

2.6.1 பள்ளிக்கூட ஆசிரியர்கள் நிகழ்ச்சித்திட்டம்

2011ஆம் ஆண்டில் பள்ளிக்கூடங்களில் இளம் புத்தாக்குனர் கழகத்திற்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கு இரு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. முதலாவது கருத்தரங்கானது நவம்பர்

மாதம் 18ஆம் திகதி கொழும்பில் மேல்மாகாணம், சப்பரகமுவா, வடமேல் மற்றும் தென் மாகாண ஆசிரியர்களுக்காக இடம் பெற்றது. தபால் தாமதங்கள் இருந்த காரணத்தினால் 120 ஆசிரியர்கள், வலய மற்றும் மாகாண மட்ட கூட்டிணைப்பு பணிப்பாளர்கள் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துக்கொண்டனர். அவர்கள், பொமிரியா மத்திய கல்லூரியின் இளம் புத்தாக்குனர் கழகத்திற்கு பொறுப்பான ஆசிரியரால் சிறந்த செயன்முறைகள் பற்றி கூறப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டதுடன் இளம் புத்தாக்குனர் விருது வழங்கல் செயன்முறையானது இலங்கை எந்திரவியராளர்கள் நிறுவகத்தை சேர்ந்த எந்திரி. எம்.ஜெ. மீகொடவினால் மேற்கொள்ளப்பட்டது.

புத்தாக்க செயன்முறை, மாணவர்களின் வாழ்க்கைத்திறனை மேம்படுத்தல் தொடர்பில் ஆசிரியர்களுக்கு விளக்கங்கள் கூறப்பட்டது. இது விஞ்ஞான கல்வியினை நாட்டில் மேம்படுத்த செய்யும். ஒரு பள்ளிக்கூடத்தில் எவ்வாறு புத்தாக்க கழகம் ஒன்றினை தாபித்தல் மற்றும் உலகளாவிய மட்டத்தில் மாணவ புத்தாக்கங்களை எவ்வாறு சேகரித்தல் பற்றிய விபரங்களையும் வழிக்காட்டல்களையும் கொண்ட DVD ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இத்தகைய அன்பளிப்பு கருவி ஒன்றினை ஆசிரியர்களுக்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது முதல் தடவையாகும்.

இந்த நிகழ்ச்சித்தொகுப்பின் இரண்டாவது கட்டமானது டிசம்பர் மாதம் 05ஆம் திகதி கண்டியிலுள்ள கன்னொருவ எனும் இடத்தைச் சேர்ந்த ரணபிம ரோயல் கல்லூரியில் இடம்பெற்றது. மத்திய மாகாணத்தை சேர்ந்த 75 ஆசிரியர்கள் இதில் கலந்துக்கொண்டனர். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவினம் ரூபாய் 497,838.70 ஆகும்.

2.6.2 “Learn TV” என்பது டயலொக் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பு செய்யப்படும் ஒரு கல்வியியல் நிகழ்ச்சியாகும். அவர்கள் புத்தாக்குனர் கழகங்களை பற்றி ஒரு தொகுப்பு நிகழ்ச்சித்திட்டந்களை ஒளிபரப்ப ஒத்துக்கொண்டனர். இது தொடர்பிலான படமெடுப்பானது வெளிநபர்கள் யாரினதும் உதவியின்றி ஆணைக்குழுவின் பதவியினராலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர்களின் புத்தாக்கங்கள் காட்சிப்படுத்தப்படும் பொழுது அப்புத்தாக்கத்தின்

உருவாக்கத்திற்கு தூண்டுதலாக இருந்த விஞ்ஞான விளக்கங்களும் விளக்கமாக கூநப்படல் மிகவும் சிறப்பாகும்.

2.7 ஆளுமை சட்டகத்தை மேம்படுத்தல்

2.7.1 சபைக்கூட்டங்கள் - தொடர்ச்சியான கால இடைவெளிகளில் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் நிறுவனம் தொடர்பிலான சகல விவரங்களும் சபையின் அவதானத்திற்கு கொண்டு வரப்பட்டது. உதவி ஆணையாளர் மிகவும் சுறுசுறுப்புடனும் உற்பத்தியை அதிகரிக்க கூடியதான பேச்சுத்திறனுடனும் இந்தக்கூட்டத்தில் கலந்துக் கொண்டதுடன், தனது அநுபவங்களையும் பகிர்ந்துக் கொண்டார்.

வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

2011

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

46/56, லான்லிப் கட்டிடம்

நவம் மாவத்தை

கொழும்பு 02.

தொலைபேசி: 011 – 2424964

தொலை மடல்: 011 - 2437354

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

2011, டிசம்பர் 31இல் உள்ளவாறான

ஐந்தொகை

சொத்துக்கள்	குறிப்புகள்	2011 ரூபாய்	2010 ரூபாய்
நடப்பல்லாத சொத்துகள்			
சொத்து, ஆதனம் கருவிகள்	5	**1,872,993.27**	4,704,423.34
நடப்பு சொத்துகள்			
ஏனைய ஒப்பந்த சேவைகளுக்கான முன் கொடுப்பனவு		**341,088.44**	341,088.44
அனர்த்தக்கடன்		**549,722.00**	791,882.00
கடன் புத்தாக்குனர் நிதியம்		**9,781,804.80**	9,933,330.00
மீளளிக்கத்தக்க வைப்புகள்			0.00
முற்பண கொடுப்பனவு		**14,800.00**	15,300.00
(தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை திட்டமிடல் செயற்படுத்துகை அமைச்சு)		**7,560.00**	7,560.00
எரிபொருள் வைப்பு		**100,000.00**	100,000.00
தேர்தல் ஆணையாளர்		**13,524.50**	19,729.50
ஏனைய முற்பணங்கள்	7	**136,632.00**	2,835,094.30
காசும் காசு மீதியும்	8	**3,409,438.49**	3,430,531.18
மொத்த சொத்துகள்		**16,227,564.30**	22,178,938.76
நிதியமும் பொறுப்புகளும்			
திரட்டப்பட்ட நிதியம்	9	**10,087,396.53**	14,310,620.91
ஏனைய நிதியம்	10	**2,543,450.34**	2,523,450.34
நடப்பல்லாத பொறுப்புகள்			
பணிக்கொடை ஒதுக்கீடு	11	**1,467,441.38**	1,455,287.50
நடப்பு பரிப்புகள்			
நிலுவைச் செலவினங்கள்	12	**2,129,276,.05**	3,889,580.09
மொத்த நிதியமும் பொறுப்புகளும்		**16,227,564.30**	22,178,938.84

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

2011, டிசம்பர் 31இல் முடிவுற்ற வருடத்திற்கான

வருமான செலவினக்கணக்கு

வருமானம்	குறிப்புகள்	2011 ரூபாய்	2010 ரூபாய்
அரச பங்களிப்பு			
அரச பங்களிப்பு – நடப்பு		**11,963,400.00**	12,651,000.00
அரச பங்களிப்பு – புத்தாக்குனர் நிதியம்			0.00
கூட்டுக			
ஏனைய வருமானம்			
ஏனைய வருமானம்	4	**158,675.18**	659,780.27
வாகன விற்பனை			1,036,000.00
அந்நிய செலாவணி			
மொத்த வருமானம்		**12,122,075.18**	14,346,780.27
கழிக்க			
செலவினங்கள்			
(1) நிர்வாக மற்றும் தாபிப்பு			
பதவியினருக்கு வேதனாதிகள்	1	**5,298,145,.68**	5,692,551.45
நிர்வாக மற்றும் நிதி செலவினங்கள்	2	**8,137,683.86**	8,499,130.47
பெறுமானத்தேய்வ – நிலையான சொத்துகள்	5	**3,023,690.15**	3,068,940.02
பணிக்கொடை	11	**169,261.38**	195,182.50
(11) செயற்றிட்ட செலவினங்கள்			
புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்	3	**3,169,056.49**	4,363,454.43
மொத்த செலவினம்		**19,797,837.56**	21,819,258.87
செலவுக்கு மிஞ்சிய வருமானம்		**(7,675,762.38)**	(7,472,478.60)
மேலதிக நிதியம் திரட்டப்பட்டநிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது		**12,122,075.18**	14,346,780.27

தயாரிப்பு :

பரிசோதிப்பு :

கையொப்பம் இடப்பட்டது :

....	....
எ.கெ.பி. பீரிஸ் **பிரதி பணிப்பாளர் (நிதி)**	**டி. அநுராதா எல். இளையப்பெருமா** **பணிப்பாளர்**
....	....

கணக்குகளுக்கான குறிப்புகள்

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
குறிப்பு 01 பதவியினருக்கு வேதனாதிகள்		
சம்பளங்கள்	**2,949,512.57**	3,396,214.70
வாழ்க்கைப்படி செலவினங்கள்	**935,805.00**	922,112.50
விசேட படிகள்	**135,903.95**	-
ஊழியர் சேமலாப நிதியம்	**518,083.14**	453,963.47
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்	**103,616.62**	90,792.68
உறுப்பினர்களுக்கான சம்பளங்கள்	**440,910.00**	598,850.00
மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு	**214,314.40**	230,618.10
	5,298,145.68	5,692,551.45

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினங்கள்		
பிரயாணம் - உள்ளூர்	**48,917.00**	59,838.25
காகிதாயிகள் மற்றும் ஏனைய அலுவலக கோரிக்கைகள்	**144,884.10**	50,361.32
எரிபொருள் மற்றும் ஏனைய மசகு எண்ணெய்	**261,381.00**	748,924.00
வாகன திருத்துகையும் மற்றும் பேணல் செலவினங்களும்	**510,432.19**	493,907.24
கருவி திருத்துகையும் மற்றும் பேணல் செலவினங்களும்	**152,867.29**	50,135.00
தபால் செலவினம்	**8,520.00**	5,600.00
தொலைபேசி கட்டணங்கள்	**210,905.87**	282,476.84
பாவனைகள்	**152,768.00**	104,850.00
ஓப்பந்த சேவைகள்	**367,223.13**	616,519.59
மின்சார கட்டணம்	**474,849.83**	460,.056.00
துப்பரவாக்கல் செலவினம்	**162,000.00**	162,000.00
நீர் கட்டணம்	**75,875.01**	60,940.11
வுாடகை	**5,188,295.44**	5,029,269.10
சந்தாவும் பங்களிப்பும்	**-**	-
கேளிக்கை செலவினங்கள்	**68,849.10**	46,830.02
ஏனைய நிர்வாக செலவினங்கள்	**35,885.90**	29,723.00
புதினப்பத்திரிகைகளும் பருவ சஞ்சிகைகளும்	**24,030.00**	47,700.00
வங்கிக்கட்ணம்	**-**	-
நலன்புரி செலவினங்கள்	**-**	-
கணக்காய்வு கட்டணம்	**250,000.00**	250,000.00
	8,137,683.86	8,499,130.47

கணக்குகளுக்கான குறிப்புகள்

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்		
ஜனாதிபதி விருது வைபவம்	**1,518,124.43**	25,960.00
அதிகாரப்பூர்வமான சங்கங்களை ஒழுங்கமைத்தல்	-	86,037.00
புத்தாக்குனர் கண்காட்சி	-	-
பிரசுரிப்பும் பரப்புதலும்	**68,196.80**	-
புத்தாக்குனரின் முடிவுமட்ட உற்பத்தி விருத்தி ஆராய்ச்சி அபிவிருத்தி	-	-
புத்தாக்குனரின் முடிவுமட்ட உற்பத்தி விருத்தி ஆராய்ச்சி அபிவிருத்தி – 2008	-	-
புத்தாக்கத்தின் ஊடக தேசத்தை மீண்டும் கட்டியெழுப்பல்	-	3,358,316.73
பள்ளிக்கூட புத்தாக்குனர் சுற்றமைப்புகள்	-	287,198.16
தொழில்நுட்பக்கல்லூரிகளில் புத்தாக்குனர் சுற்றமைப்புக்களை அமைத்தல்	-	51,910.00
விருத்திக்கான நிதியுதவி	-	75,000.00
செயற்றிறன் மேம்படுத்துகை	-	5,000.00
விஞ்ஞான புத்தாக்கங்களின் புதிய கண்டுபிடிப்புகள்	-	474,032.54
காட்சிய மற்றும் விற்பனை நிலையத்தை அமைத்தல்	-	-
மேலும் விருத்தி செய்யப்படுவதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி	**353,845.31**	-
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்காக ஒரு வலைக்கடப்பீடத்தை வங்கியினையும் விருத்தி செய்தல்	**80,500.00**	-
புத்தாக்க மட்டத்தை ஒழுங்கமைத்தல் (பள்ளிக்கூடங்கள், கல்வியியல், வலயம்)	**23,464.00**	-
பள்ளிக்கூட மட்ட புத்தாக்க செயன்முறை விழிப்புணர்ச்சியை மீண்டும் செயற்படவைத்தல்	**504,933.70**	-
கவருவதற்காக தேசியமட்ட கண்காட்சி, புத்தாக்கங்களுக்கான வியாபார சந்தை	**503,923.00**	-
உள்நாட்டு இறைவரி	**116,069.25**	-
	3,169,056.49	4,363,454.43

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
இலக்கம் 04 – ஏனைய வருமானம்		
அனர்த்தக்கடன் வட்டி	**28,844.38**	38,295.27
விசேட முற்பணத்திற்கான வட்டி	-	-
கடன் வட்டி புத்தாக்குனர் நிதியம்	**35,887.80**	11,250.00
ஏனைய வருமானம்	**93,943.00**	610,235.00
ஏனைய வருமானம் புத்தாக்குனர் நிதியம்	-	-
	158,675.18	659,780.27
இலக்கம் 07 – முற்பணங்கள்		
முற்பணங்கள்	**136,632.80**	2,835,094.30
	136,632.80	2,835,094.30
இலக்கம் 08 – காசும் வங்கி மீதியும்		
கணக்கு இலக்கம் 033-1-001-0-1791066 (T/F)	**17,523.42**	246,029.11
கணக்கு இலக்கம் 033-1-001-2-1791065 (P/F)	**3,391915.07**	3,184,502.07
முத்திரைக்கான சில்லறைக்காசு	-	-
	3,409,438.49	3,430,531.18

குறிப்பு 05

நிலையான சொத்துக்களும் பெறுமானத்தேய்வு கட்டணங்களும்

இ. க. கட்டளை சட்டம் - 18

வகுதிகள்	பெறுமானத் தேய்வு வீதம்	கொள்வனவு காலவரையறை 2011.01.01 ரூபாய்	2011இல் சேர்ப்பு (கிரயமாக) ரூபாய்	2011.12.31இல் உள்ளவாறாக மொத்த கிரயம் ரூபாய்	2011.01.01 வரை திரட்டப்பட் பெறுமானத்தேய்வு கட்டணங்கள் ரூபாய்	2011 வருடத்திற்கான பெறுமானத்தேய்வு கட்டணங்கள் ரூபாய்	2011.12.31இற்கு திரட்டப்பட்ட கட்டணங்கள் ரூபாய்	குறைத்து எழுதப்பட்ட மிகுதி 2011.12.31 ரூபாய்
1. தளபாடமும் கருவிகளும்	15%							
அ. தளபாடமும் கருவிகளும்		537,751.00		537,751.00	219,128.46	80,662.50	299,790.96	237,960.04
ஆ. நிறைவேற்றுனர் கதிரைகள்		157,222.50		157,222.50	94,333.52	23,583.38	117,916.90	39,305.60
இ. தட்டெழுத்து மேசை		4,700.00		4,700.00	4,700.00		4,700.00	-
ஈ. ராக்கைகளும் பெட்டிகளும்		90,236.00		90,236.00	73,891.00	7,507.50	81,398.50	88,137.50
உ. அசைக்கக்கூடிய சிறு அலுமாரி		14,787.00		14,787.00	8,872.20	2,218.05	11,090.25	3,696.75
		804,696.50		**804,696.50**	**400,925.18**	**113,971.43**	**514,896.61**	**289,799.89**
2. அலுவலக உபகரணங்கள்	20%							
அ. அலுவலக உபகரணங்கள்		771,756.70		771,756.70	670,914.30	20,564.60	691,478.90	80,277.80
ஆ. மின்னணுவியல் தட்டெழுத்துப்பொறி		117,887.50		117,887.50	117,887.50		117,887.50	-
இ. கணணி மற்றும் துணையுறுப்புகள்		5,871,130.18	172,210.00	6,043,340.18	4,545,063.68	834,276.50	5,379,340.18	664,000.00
ஈ. நிழற்பிரதி இயந்திரம்		385,400.00		385,400.00	191,080.00		191,080.00	194,320.00
உ. தொலைபேசி		337,149.95	4,900.00	342,049.95	258,138.75	52,206.04	310,344.79	31,705.16
ஊ. நகலாக்கி		717,875.00		717,875.00	654,625.00	63,250.00	717,875.00	-
		8201,199.33	**177,110.00**	**8,378,309.33**	**6,437,709.23**	**970,297.14**	**7,408,006.37**	**970,302.96**
3. அ. மூலவகை மாதிரிகளும் பெயர்பலகைகளும்	10%	105,495.00		105,495.00	104,246.00	1,249.00	105,495.00	-
ஆ. காட்சியக நிலையம்		110,805.00		110,805.00	56,324.15	11,080.50	67,404.65	43,400.35
		216,300.00		**216,300.00**	**160,570.15**	**12,329.50**	**172,899.65**	**43,400.35**
4. நூலக புத்தகங்கள்	10%	**193,357.48**		**193,357.48**	**181,459.58**	**3,540.60**	**185,000.18**	**8,357.30**
5. வாகனங்கள்	20%	**9,557,842.83**		**9,557,842.83**	**8,023,490.60**	**1,507,832.17**	**9,531,322.77**	**26,520.06**

6. கண்காட்சி சாவடி	25%							
அ. கண்காட்சி சாவடி		127,429.75		127,429.75	127,429.75	0.00	127,429.75	-
ஆ. திரைச்சீலைகள்		37690.00		37690.00	19,052.50	6,212.50	25,265.00	12,425.00
		165,119.75		**165,119.75**	**146,482.25**	**6,212.50**	**152,694.75**	**12,425.00**
7. எறியம் மற்றும் நிழற்பிரதிபெட்டி	20%	**1,715,068.50**		**1,715,068.50**	**1,224,723.50**	**264,857.00**	**1,489,580.50**	**225,488.00**
8. தொலைக்காட்சி மற்றும் கட்புல நடாக்கள் பதிவி	20%	**146,850.00**	**15,150.00**	**162,000.00**	**110,430.00**	**12,140.00**	**122,570.00**	**39,430.00**
9. அலுவலக பொருத்துகள்	15%	**1,016,868.75**		**1,016,868.76**	**627,089.24**	**132,509.81**	**759,599.05**	**257,269.71**
		22,017,303.15	**192,260.00**	**22,209,563.15**	**17,312,879.73**	**3,023,690.15**	**20,336,569.88**	**1,872,993.27**

கணக்குகளுக்கான குறிப்புகள்

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
குறிப்பு 09 திரட்டப்பட்ட நிதியம்		
முன் கொண்ட வந்த மிகுதி அரசபங்களிப்பு மூலதனம்	**11,612,148.91**	17,615,239.71
முன் கொண்டு வந்தது திரட்டப்பட்டது (நட்டம்Æமிகை)	**(7,675,762.38)**	(7,472,478.60)
அரசபங்களிப்பு மூலதனம்	**6,151,010.00**	4,500.000.00
சீராக்கல் நாட்குறிப்பு Æ02		(370,390.20)
பணிக்கொடை	**-**	38,250.00
	10,087,396.53	14,310,620.91

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
குறிப்பு 10 ஏனைய நிதியங்கள்		
புத்தாக்குனர் நிதியம்	**2,522,375.59**	2,502,375.59
பொலநறுவை மாவட்ட நிதியம்	**21,074.75**	21,074.75
	2,543,450.34	2,523,450.34

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
குறிப்பு 11 பணிக்கொடை ஒதுக்கீடு		
2011.01.01இல் உள்ளவாறான மிகுதி	**1,455,287.50**	1,298,355.00
ஏனைய ஒதுக்கீடு	**-**	(38,250.00)
வருடத்திற்கான ஒதுக்கீடு	**169,261.38**	195,182.50
பணிக்கொடை ஒதுக்கீடு	**(157,107.50)**	-
2011.12.31இல் உள்ளவாறான மிகுதி	**1,467,441.38**	1,455,287.50

	2011 (ரூபாய்)	2010 (ரூபாய்)
குறிப்பு 12 நிலுவைச் செலவினங்கள்		
சம்பளங்கள்	**17,376.00**	17,728.00
வாழ்க்கைப்படி செலவினம்	**7,995.00**	7,350.00
விசேட படிகள்	**2,606.40**	-
எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்	**15,960.00**	-
மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு	**14,233.80**	77,499.00
புதினப்பத்திரிகைகள் மற்றும் பருவ சஞ்சிகைகள்	**1,780.00**	4,320.00
பிரயாணம் - உள்ளூர்	**-**	11,375.00
தொலைபேசி கட்டணம்	**36,782.28**	22,290.67
மின்சார கட்டணம்	**34,894.65**	32,534.86
நீர்க்கட்டணம்	**8,492.28**	11,715.24
மீளளிக்கத்தக்க கேள்விமனு லைப்புகள்	**36,087.20**	36,087.20
கடன் கொடுத்தோர்	**82,860.65**	82,860.65
கணக்காய்வுக் கணக்கு	**920,000.00**	670,000.00
மானெல்காந்தி	**503.27**	503.27
கல்வி அமைச்சு	**46,305.00**	46,305.00
	1,225,876.53	1,020.568.89

<u>புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்</u>

<u>நிலுவைச்செலவினங்கள்</u>

ஆக்கப்பூர்வமான சங்கங்களை ஒழுங்கமைத்தல்	**-**	-
சர்வதேச கண்காட்சி	**903,399.52**	1,697,792.80
பிரசுரிப்பும் பரப்புதலும்	**-**	1,171,218.40
காட்சியக மற்றும் விற்பனை நிலையத்தை அமைத்தல்	**-**	-
	903,399.52	2,869,011.20
மொத்த நிலுவைச் செலவினங்கள்	**2,129,276.05**	

<u>குறிப்பு 13</u>

<u>பின் ஐந்தொகை நிகழ்வுகள்</u>

பின் ஐந்தொகை நிகழ்வுகள் எதுவுமில்லை

அரசமானியங்கள்

2011ஆம் ஆண்டிற்கான அரச பங்களிப்பு பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது

இலங்கை கணக்கியள் கட்டளைச்சட்டம் 24இற்கு அமைய	ரூபாய்	
நடப்பு மானியம்		11,963,400.00
மூலதன மானியம்		6,151,010.00

தொடர்புடைய நபர்களின் வெளிப்படுத்தல்கள்

2011ஆம் ஆண்டில் தொடர்புடைய நபர்களின் கொடுக்கல் வாங்கல்கள் எதுவுமில்லை

நிதிக்கட்டமைப்பு

அரச பங்களிப்பு கணக்குகள்

வருடம்	அரச பங்களிப்பு மூலதனம்
1991	163,050.00
1992	1,700,000.00
1993	-
1994	250,000.00
1995	196,000.00
1996	113,500.00
1997	757,000.00
1998	1,700,000.00
1999	290,000.00
2000	4,500,000.00
2001	2,870,000.00
2002	700,000.00
2003	2,500,000.00
2004	621,000.00
2005	5,997,000.00
2006	33,991,000.00
2007	37,100,000.00
2008	24,106,000.00
2009	15,765,000.00
2010	4,500,000.00
2011	6,151,010.00

<u>கணக்கியல் கொள்கைகள்</u>

01. 1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது.

02. ஒத்திசைவு கூற்று

இலங்கை பட்டயக் கணக்கறிஞர்களால் வெளியிடப்பட்டுள்ள கணக்கியற் கட்டளைச் சட்டங்கள் மற்றும் 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு சட்டங்களுடன் ஆணைக்குழு ஒத்திசைகின்றது.

03. தாபிப்பின் அடிப்படை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுகளாவன இலங்கை கணக்கியற் கட்டளை சட்டங்களுடன் ஒருங்கிணையும் வகையிலும் மற்றும் மாறாத வரலாற்று கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

04. நிதியம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு அரசின் பங்களிப்பானது அரசின் வருடாந்த மதிப்பீடுகளில் இரு தலைப்புக்களின் கீழ் காட்டப்படுகின்றது. அவையாவன,

1. நடப்பு செலவினத்திற்கான மானியம்
2. மூலதன செலவினத்திற்கான மானியம்

நடப்பு மானியமானது வருமான செலவின கணக்கிற்கும் அதே நேரம் மூலதன செலவினமான திரட்டப்பட்ட நிதியத்திற்கு கீழ் நேரடியாக மூலதன கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படல்.

ஆணைக்குழுவின் நடப்பு மானியமானது வருமான செலவினக்கணக்கின் கீழ் கீழ்வரும் தலைப்புகளின் கீழ் காட்டப்படும்

1. நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்
2. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிரயமானது கருத்திட்ட செலவினமாக வருமான செலவினக்கணக்குகள் பதிவழிப்பு செய்யப்படுகின்றது.

இறுதியாக கூறப்பட்ட செலவினமானது, 1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஆணைக்குழுவின் குறிக்கோள்களை பூரணப்படுத்தும் செயற்பாடுகள் நிமித்தம் செலவிடப்பட்டதாகும்.

05. பெறுமானத்தேய்வு

நிலையான சொத்துகளாவன நேர்கோட்டு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்களாவன அவற்றின் மதிப்பீட்டு செய்யப்பட்ட பாவனைக்காலத்தின் முடிவில் பதிவழிப்பு ஆகுமாறு பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	வீதம்
அ) தளபாடமும் பொருத்துகளும்	15%
ஆ) அலுவலக கருவிகள்	20%
இ) மூலவகை மாதிரிகளும் பெயர்ப்பலகைகளும்	10%
ஈ) நூலக புத்தகங்கள்	10%
உ) வாகனங்கள்	20%
ஊ) கண்காட்சி சாவடி	25%

மேற்கூறப்பட்ட நிலையான சொத்து செலவினம் ஏற்பட்ட 2006ஆம் ஆண்டிலிருந்து மேற்கூறப்பட்ட வீதத்திலிருந்து பெறுமானத்தேய்வு கணிப்பீடானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

06. காசுப் பாய்ச்சல்

இலங்கை கணக்கியல் கட்டளைச்சட்டம் 09இற்கு அமைவுற நேரடியற்ற முறையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

07. ஓய்வூதிய பணிக்கொடை

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற பதவியினருக்கான பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. சலல்/எப்/எஸ்எல்ஏசீ/எப்டி/2011
My No

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி 2012 ஆகஸ்ட் 15
Date

ஆணையாளர்,

இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழு

இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு 2012 மே 24 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය
தொலைபேசி 2887028 -34
Telephone

ෆැක්ස් අංකය
பக்ஸ் இல 2887223
Fax No.

ඉලෙක්ට්‍රොනික් තැපැල්
ஈ- மெயில் oaggov@sltnet.lk
E-mail.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ)	இ.க.நி 16	ஒரு வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்காக பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 5 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்காக மாத்திரம் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இ.க.நி 18 — நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யும் போது புத்தகப் பெறுமதி பூச்சியமான ஆனால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இ.க.நி 24 — சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற மூலதன மானியங்களை பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதனிக்கப்பட்டன.

(அ) ஆணைக்குழுவின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா ஆறு (6) மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதியை கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2009 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வு அறிக்கைகளில் இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது)

(ஆ) பத்தரமுல்ல பிரதேசத்தில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்திற்காக செலுத்தப்பட்ட மீள அறவிட முடியுமான வைப்புப் பணமான ரூபா 125,000 தொகை மீளாய்வாண்டின் போதும் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

5 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற கீழே குறிப்பிடப்படுகின்ற செலுத்த வேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

44-43

	ரூபா
நானாவிதக் கடன்கொடுத்தோர்	83,364
கல்வி அமைச்சு	46,305
	129,669

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்கு விடயங்கள்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
	ரூபா	
வங்கியிலும் கையிலும் உள்ள காசு	3,409,438	மீதி உறுதிப்படுத்தல்கள்
கடன்கொடுத்தோர்	82,861	பட்டோலைகள்
முற்பணம்	136,633	பட்டோலைகள்
முற்பணத் தீர்த்தல்	2,698,472	நாட்குறிப்புப் பதிவுகள்

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை
(அ) 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபம்	அரசாங்க நிறுவனங்களில் வாகன அகற்றல்களினால் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்படவேண்டிய போதிலும் வாகன

		அசுப்புக்களின் மூலம் கிடைத்த ரூபா 1,036,000 பணம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டின்போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9:3:1 ஆம் பந்தி	ரூபா 100,000 இற்கு மேற்பட்ட தொகைக்கு மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்க்கும் செலவுகளுக்காக விசேட அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கேஜு-0614 ஆம் வாகனத்திற்காகச் செலவுசெய்யப்பட்ட ரூபா 187,000 தொகைக்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ)	2002 பெப்ரவரி 22 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம்	ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 5 வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 சர்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 நிதிய மீதிகள் ரூபா 2,543,450 ஆக இருந்ததுடன், இந் நிதியத்தினை ஸ்தாபித்த நோக்கம் என்ன என கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பல வருட காலத்திலிருந்து நிதியக் கணக்கின் மீதி மாற்றமடையாது காணப்படுகின்றதுடன் நிதியத்திற்குரிய சொத்துக்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. விபரம் பின்வருமாறு

	ரூபா
புத்தாக்குனர்களின் நிதியம்	2,522,375
பொலன்னறுவை மாவட்ட நிதியம்	21,074
	2,543,450

3. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 7,675,762 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதனையொத்த பற்றாக்குறை ரூபா 7,472,478 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பற்றாக்குறை ரூபா 203,284 தொகையால் அதிகரித்தமைக்கு ரூபா 2,224,706 இனால் வருமானம் குறைவடைந்தமை மற்றும் ரூபா 2,021,422 இனால் செலவினம் குறைவடைந்தமை என்பன விசேடமாகத் தாக்கமளித்திருந்தன.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக ரூபா 40 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,804,757 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 2009 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட செயற்பாடுகளுக்காக ரூபா 1,977,808 செலவிடப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு

	ரூபா
சர்வதேச வெற்றியீட்டிய புத்தாக்குனர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்கு பத்திரிகை அறிவித்தல்களுக்காக	1,183,415
புத்தாக்குனர் கண்காட்சிகளுக்கு சமுகமளித்தல்	794,393
	1,977,808

(ஆ) 2011 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடு	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா,மில்லியன்	அடையப்பட்ட பெறுபேறு
(i)	நர்ட் நிறுவனம், தொழில்நுட்பக் கல்லூரி ஊடாக தெரிவு செய்யப்பட்ட புத்தாக்கங்களுக்காக தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி வழங்கல்	05	எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை
(ii)	தேசிய மட்டத்தில் கண்காட்சி நடாத்துதல்	10	கண்காட்சி நடாத்தப்பட்டிருக்கவில்லை
(iii)	சர்வதேசக் கண்காட்சிகள் மற்றும் போட்டிகளுக்காக பங்குபற்றுதல்	02	பங்குபற்றவில்லை
(iv)	பாடசாலை மட்டத்திலும் வலய மட்டத்திலும் புத்தாக்க கண்காட்சியை நடாத்துதல்	4.5	புத்தாக்க கண்காட்சிகள் நடாத்தப்பட்டிராததுடன் ரூபா 463,906 செலவில் மாநாடுகள் நடாத்தப்பட்டிருந்தது.
(v)	நிலையான சொத்துக்களைக் கையேற்றல்	2.2	ரூபா 183,100 ஆன 01 லெப்டொப் கணனி மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) புத்தாக்க ஊக்குவிப்பிற்காக வழங்கப்பட்ட கடன்கள்

புத்தாக்குனர்களாக இனங்காணப்பட்ட 12 நபர்களுக்கு புத்தாக்க ஊக்குவிப்பிற்காக 2008/2009 ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா

10,200,000 ஆன கடன் தொகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு:

(i) புத்தாக்குனர்களுக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கான தவணைப் பணம் மற்றும் வட்டி என்பன உரிய முறையில் அறவிடப்படாதிருந்ததுடன் இது வரையிலும் ரூபா 418,196 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த தொகை ரூபா 9,781,804 ஆக இருந்ததுடன் அத் தொகையினை அறவீடு செய்வதற்கான முறையான நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடன் பெற்ற இரண்டு புத்தாக்குனர்கள் மாத்திரம் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பவற்றைச் செலுத்தியிருந்ததுடன் ரூபா 8,200,000 பெற்றிருந்த பத்து புத்தாக்குனர்கள் கடன் செலுத்துவதைக் கைவிடப்பட்டிருந்ததுடன் இத் தொகையினை அறவீடு செய்தல் சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) கடன் மற்றும் உதவிகள் வழங்குவதனால் எதிர்பார்க்கப்படும் நோக்கம் என்பன அமுலப்படுத்தப்படுகின்ற போதிலும் அப் பணம் உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுகின்றதா என்பது தொடர்பாக எவ்வித மேற்பார்வையோ அல்லது பின்தொடர் நடவடிக்கைகளோ ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படவேண்டிய பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஆக்கவுரிமை அதிகாரப்பத்திரங்களை வழங்குவதற்குப் பொருத்தமான புதிய ஆக்குனர்களைத் தெரிவுசெய்து ஆக்கவுரிமை அதிகாரப் பத்திரங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(ii) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் இலங்கையின் புத்தாக்குனர்களின் அறிவாற்றல் ஆதனங்களின் உரிமைகள் மீறப்படும் வேளையில் அவர்களின் அறிவாற்றல் ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக சட்டரீதியான உதவிகளை வழங்குதல்.

(iii) ஆக்கவுரிமை அதிகாரப் பத்திரங்களைப் பிணையாக வைத்துக்கொண்டு அரசாங்க அல்லது ஏனைய நிறுவனங்களில் கடனைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வணிகரீதியான பெறுமதிமிக்க புதிய ஆக்கங்களைச் சிபார்சுசெய்தல்.

(iv) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வசதிகளைத் தேடிக்கொள்வதற்கு உதவியளித்தல்.

(v) புத்தாக்குனர்களுக்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில் அனைவருக்கும் திறந்த ஆய்வுகூடம் ஒன்றினை ஆரம்பித்தல்.

(vi) புதிய ஆக்கங்களுக்காக செய்திப் பத்திரிகையினை அச்சிடலும் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் புதிய ஆக்கங்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

(vii) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பாக விஞ்ஞானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை பிரயோகித்தல் மற்றும் பரவலாக்குதல்.

(viii) புத்தாக்குனர்களுக்கிடையே கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்காக மாதாந்த கூட்டத்தை ஒழுங்குமுறையாக நடாத்துதல்.

(ix) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்காக நடாத்தப்படுகின்ற சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இலங்கையின் புத்தாக்குனர்களுக்கு உதவிகளை வழங்குதலும் அவ்வாறான போட்டியாளர்களை சிபார்சு செய்தலும்.

(x) பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தரமான சங்கங்களை ஒழுங்கமைத்தல்.

4.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான டபள் கப் வாகனம் மற்றும் பஜிரோ ஜீப் வண்டி பல வருடகாலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 5 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அதனை ஓட்டுவதற்காக ஆணைக்குழுவில் இரண்டு சாரதிகள் மாத்திரமே இருந்தனர்.

(இ) புத்தாக்குனர்களுக்காக கடன் வழங்குதல் மற்றும் கடன் அறவீடு செய்தல் என்பவைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,391,915 ஆக இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் கடன் வழங்கல் மற்றும் கடன் அறவீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்தமையினால் இக் கணக்கு செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வண்டிற்காக மூலதன ஏற்பாடாகக் கிடைத்த ரூபா 2,394,090 தொகையில் ரூபா 1,965,611 ஆனது முன்னைய வருடங்களுக்குரிய விளம்பர கொடுப்பனவுகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2011 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்று நிருபத்தின் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களினதும் அலுவலகங்கள் முடியுமான வரையில் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் ரூபா 433,325 தொகையான மாதாந்த வாடகை செலுத்தி கட்டிடமொன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது.

4.5 மனித வள முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் பதவியணியினரில் கீழ் குறிப்பிடப்படுகின்றதன் படி அங்கீகரிக்கப்பட்ட 11 பதவியணிகளில் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்	உள்ளவாறான பதவியணியினர்	வெற்றிடங்கள்
பிரதிப் பணிப்பாளர்	02	-	02
கணக்காளர்	01	-	01
நிருவாக உத்தியோகத்தர்	01	-	01
காசாளர்	01	-	01
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (வெளியீடுகள்)	01	-	01
ஆராய்ச்சி உதவியாளர்	05	02	03
	11	02	09

5. கணக்களிப்பும் நல் ஆளுகையும்

5.1 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2011 இன் பாதீட்டினையும் உள்ளவாறான செலவினங்களையும் இணக்கஞ் செய்தபோது 90% தொடக்கம் 100% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் ஆணையாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) செயலாற்றல்
(ஈ) நிர்வாகம்

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

<u>கணக்காய்வாரள் நாயகம்</u>

<u>கணக்காய்வாளர் நாயக திணைக்களம்</u>

<u>1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2)(இ) ஆம் பிரிவின் நியதிகளின் படியாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு 2011. டிசம்பர். 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான கணக்குகள் பற்றிய கணக்காய்வாரள் அதிபதியின் அறிக்கைக்கு பணிப்பாளர் சபையினரின் அவதானிப்புகள்.</u>

2.2. **<u>கணக்குகள் பற்றிய கருத்துரைகள்</u>**

2.2.1. **<u>இலங்கை கணக்கியற் கட்டளைச் சட்டம்</u>**

(அ) இ.க.க. சட்டம் 16 கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

(ஆ) இ.க.க. சட்டம் 18 இற்கு அமைவுற வாகனங்கள் மீண்டும் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு விற்கப்பட்டுள்ளன.

(இ) இ.க.க. சட்டம் 24 இது ஒரு மூலதன மானியம் அல்ல அத்துடன் பெறுமானமானது கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

2.2.2. **<u>கணக்கீட்டு குறைபாடுகள்</u>**

(அ) கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

(ஆ) வைப்புகளை கணக்குகளில் பதியவும் அதனை அறுதியீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.3. **கொடுக்க வேண்டிய கணக்குகள்**

இவ்விடயத்தை ஆளுமை சபைக்கு தெரியப்படுத்தவும் பதிவழிக்கவும் தெரிந்துக் கொள்ளப்பட்டது

2.2.4. **கணக்காய்வுக்கு சான்று போதனை**

வங்கியில் மற்றும் கையிலுள்ள காசு மிகுதியினை உறுதிப்படுத்தும் வகையில் வங்கிக் கூற்றுக்கள் பெறப்பட்டுள்ளன.

கடன் கொடுத்தோர் மற்றும் முற்பணங்களாவன மிக நீண்ட காலமாக கணக்குகளில் காட்டப்பட்டு வருவதினால், அக்கடன் மிகுதிகளை பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாததினால் இவ்விடயத்தை ஆளுமை சபைக்கு தெரியப்படுத்தவும்பதிவழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. முற்பணங்களைஅறுதியீடு செய்தல் தொடர்பில் ஒரு நாட்குறிப்பினை உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டது.

2.2.5. **<u>சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கானல்</u>**

(அ) அரச நிதித் திணைக்களத்துடன் உசாவி விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்

(ஆ) 2011.01.01 ஆம் திகதியிடப்பட்ட தருவித்து வழங்கள் வழிகாட்டலின் 20 வதாவது இணைப்பிற்கு அமைய, அங்கீகரிக்கப்பட்ட தொகை 250,000 இற்குள் மேற்கூறப்பட்ட திருத்தல் வேலையானது முன்னெடுக்கப்பட்டது.

(இ) அரச இலாஞ்சினையை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.6. **<u>சச்சரவுக்குரிய கொடுக்கல் வாங்கள்கல்</u>**

தற்பொழுது செயற்படாது இருக்கும் பொலநறுவை மாவட்ட நிதியத்தை புத்தாக்குனரின் நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

புத்தாக்கங்களை செய்வதற்கு புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் புத்தாக்குனர் நிதியம் தாபிக்கப்பட்டதுடன் நிதியுதவி தேவைப்படும் புத்தாக்குனர்கள் இனைஙங்காணப்பட்டனர்.

4. **<u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>**

4.1. **<u>செயலாற்றுகை</u>**

(அ) செயல் திட்டங்களுக்கு அமைவுற அபிவிருத்தி திட்டங்களை அமுலாக்கம் செய்வதற்கு ஆளுனர் சபையின் அநுமதி மிக அவசியமாகும். புதிய ஆளுனர் சபையின் நியமனமானது, 2011.08.01 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்துகைக்கு வருவதினால் நிகழ்ச்சித் திட்ட அமுலாக்கமும் அத்திகதியிலிருந்தே தொடங்கப்படுகிறது.

இதற்கமைவுற 2011 ஆம் ஆண்டின் இறுதி நான்கு மாதங்களுக்குள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

முன்னைய வருடத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் ஏற்பட்ட செலவினத்தை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்புடைய நிறுவனம் விலை விவரப்பட்டியலை சமர்பித்த பின்னர் ரூபாய் 1,977,808/= கொடுப்பனவு செய்யப்பட்டது.

(ஆ) i, ii, iii, iv

2011.08.01 ஆம் திகதியன்று நியமனம் செய்யப்பட்ட ஆளுமை சபைக்கு ஏற்ப முன்னைய வருடத்தின் செயல்திட்டத்திற்கு அமைவுற இவற்றை அமுலாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

<u>புத்தாக்குனர்களை மேம்படுத்துவதற்கு வழங்கப்பட்ட கடன்கள்</u>

(ஈ) i, ii

கடன் வழங்கப்பட்ட புத்தாக்குனர்களுக்கு அவற்றை திருப்பி செலுத்தும் படி பல நினைவூட்டல்கள் எழுத்தில் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் இது வரை எதுவிதமான சாதகமான பதில்களும் கிடைக்கப்பெறவில்லை. ஆதலினால் இவ்விடயம் தொடர்பில் ஆளுனர் சபைக்கு அறியச் செய்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

iii

கடன் எடுத்தவர்களின் பௌதிக தகவல்களை பற்றி விசாரிப்பதற்கும் அது பற்றிய அறிக்கையை சமர்பிப்பதற்கும் ஒரு செயற்குழு நியமனம் செய்யப்பட்டது. பெறப்பட்ட அவதானிப்புகள் மற்றும் அறிக்கையின் பரிந்துரைப்புகள் என்பவற்றிக்கு அமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

4.2. **<u>முகாமைத்துவ வினைத்திறமையின்மை</u>**

(அ) (i) 2011, ஆகஸ்ட் மாதம் புதிய ஆளுனர் சபை நியமனம் செய்யப்பட்டவுடன், 2008, 2009, 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்படாத ஜனாதிபதி விருது வைபவத்தை நடாத்துவதற்கு விசேட அவதானம் செலுத்தப்பட்டது. இதன் பெறுபேறாக குறித்துரைக்கப்பட்ட குறிக்கோளாவன குறிப்பிடப்பட்ட வரையறைக்குள் சாதிக்கப்படவில்லை எவ்வாறயினும் இந்த வருடத்திலிருந்து இதனை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4.3. **<u>வீணான மற்றும் பாவிக்கப்படாத சொத்துகள்</u>**

(அ) தொடர்புடைய அறிக்கைகள் பெற்றுக் கொண்ட பின்னர் அவற்றை அகற்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

(ஆ) 05 வாகனங்களில் வீதியில் ஓட்ட முடியாதவாறு பழுதுற்ற நிலையில் உள்ள 02 வாகனங்களை அகற்றுவதற்கு, தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதிய தொழில் நிலைப்பிரிவின் கீழ் சாரதிக்குரிய புதிய பதவியானது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(இ) புத்தாக்குனர்களுக்கு கடன் வழங்கியவுடன் அதனை அறவீடு செய்தல் கடினமானது என அநுபவப்பட்டபடியினால், புத்தாக்குனர்களை ஊக்குவிப்பதற்காக கடன் வழங்குதலிற்கு பதிலாக, ஒரு குறிப்பிட்ட முறையின் கீழ் நிதியுதவி செய்தலிற்கு ஒரு முறையானது முறை வடிவமாக்கம் செய்யப்பட்டது.

(ஈ) முன்மைய வருடங்களின் விருத்தி வேலைகள் உறுதிப்படுத்தல் செய்த பின்பு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.4. **<u>பொருளியல் வாய்ப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்</u>**

பத்தரமுல்லையில் கட்டப்படும் புதிய செத்திரிபாய கட்டிடத்தில் அலுவலக இட வசதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த வருடத்தில் புதிய கட்டிடத்தில் நிறுவனத்தை இட அமைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.5. **<u>மனித வள முகாமைத்துவம்</u>**

வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

5. **<u>பொறுப்பும் சிறந்த ஆளுமையும்</u>**

5.1. **<u>கூட்டுறவு திட்டம்</u>**

2010 மே மாதம் தொடக்கம் ஆளுமை சபை நியமனம் செய்யப்படாததினால் கூட்டுறவு திட்டம் தயாரிக்கப்படவில்லை. 2011.08.01 ஆம் திகதியன்று புதிய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்ட பின்பு எதிர்வரும் 03 வருடங்களுக்கு கூட்டுறவு திட்டம் தயாரிக்கப்படும்.

5.2. **<u>பாதீடு கட்டுப்பாடு</u>**

2011.08.01 ஆம் திகதி ஆணைக்குழுவின் ஆளுமை சபை நியமனம் செய்யப்பட்டதை தொடர்ந்து அன்றிலிருந்து 04 மாதங்கள் மட்டுமே ஆணைக்குழுவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைவுற பாதீடு செலவினம் மற்றும் உண்மையான செலவினம் இவற்றிற்கிடையேயான வித்தியாசம் உருவாக்கப்பட்டது.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் துறையில் முறை சார்ந்த ரீதியில் செயன்முறைகள் முறைவடிவமாக்கம் செய்யப்பட்டன.

டி. அநுராதா எல். இளையப்பெருமா
பணிப்பாளர்
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு